[8th August 1966

*227 **கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் இலவச தண்ணீர் சப்ளை செய்யக்கூடாது என ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ராஜ்ய சர்க்கார் அண்மையில் கட்டளை இட்டிருக்கிறதா?

(இ) ஆம் என்றால், அதற்கான காரணங்கள் யாவை?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) ஆம்; ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு பள்ளிக் கூடங்களுக்கும் மருத்துவ மனைகளுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் தண்ணீர் இலவசமாக விநியோகிக்கக்கூடாது என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான தல அதிகார நிறுவனங்களின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. எனவே, நகராட்சியில், பொது மக்களுக்குக் குடிநீர் வர்த்தக அடிப்படையில் வழங்கப்பட்டாலும், நீர்வழங்கு வேலைத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றிப் பேணிவருவதற்கும், அதே சமயத்தில் அவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன்களுக்கான ஆண்டுத் தவணைத் தொகைகளைச் செலுத்துவதற்கும் இத்தல அதிகார நிறுவனங்களால் இயலவில்லை. ஆகவே, பள்ளிகள், மருத்துவமனைகள், அறநிலையங்கள் போன்றவற்றிற்கு இலவசமாக நீர்வழங்கி, அதனால் அவை தங்கள் வருவாயை இழக்க முடியாத நிலையிலுள்ளன. மேலும், அவ்வாறு இலவசமாக நீர் வழங்க வகை செய்யும் ஏற்பாடு அதுவும் நீர்வழங்குவது குறித்த துணைவிதிகளில் இல்லை.

திரு. ம. கமலநாதன்: ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் தண்ணீர் பெற கட்டணம் செலுத்திப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இலவசக் கல்வி கொடுக்கும் நிலையில் அரசாங்கம் தண்ணீரையும் இலவசமாக கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்த அளவுக்கு அரசாங்கத்திடம் பணம் இல்லாத காரணத்தால்தான் ஓரளவு கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி: மருத்துவ மனைக்கு இலவசத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் இரண்டு மணி நேரம் அளவுக்கே தண்ணீர் கொடுக்கப்படுவதால் சுகாதாரக் கேடான நிலைமை இருப்பதால் அரசாங்கம் இது பற்றிப் பரிசீலிக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தண்ணீர் வழங்கப்படுகிற நேரம் இரண்டு மணி என்றாலும் தாராளமாக வழங்கப்படுகிறது.

*228 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to State—

(*a*) whether drinking water supply position in Ooty has become precarious; and

(*b*) if so, the action taken thereon?